# MCOP No.122/2019

**தேதி- 24.03.2025**

**பெயர் : திரு. தாராசங்கர், த/பெ. விஸ்வநாதன்**

**எ.ம.சா.1 சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

TN 23 BV 5349 என்ற டிராக்டர் வாகனத்தின் இன்சூரன்ஸ் காப்பீட்டு செய்யப்பட்ட பிறகு தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான், அன்றைய தினம் பிற்பகல் 5.55 மணிக்கு இன்சூரன்ஸ் செய்யப்பட்டது, ஆனால் அன்றைய தினமே பிற்பகல் 6.00 மணிக்கே விபத்து நடந்துவிட்டது, அது சாத்தியமல்ல. காரணம், விபத்து நடந்த பகுதிக்குச் செல்ல 45 நிமிடங்கள் ஆகும், எனவே 10, 15 கி.மீ. தூரம் என்பதால் இன்சூரன்ஸ் செய்யப்பட்ட பின்பு விபத்து நடக்க வாய்ப்பில்லை. மேலும், முதல் தகவல் அறிக்கையும் 29 நாட்கள் கழித்து காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள டிராக்டர் வாகனமானது இந்த விபத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

விபத்து வாகனமான டிராக்டர் வாகனமானது இதற்கு முன்பு வேறு ஏதாவது இன்சூரன்ஸ் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இதற்கு முன்பு காப்பீடு செய்யப்படாததால் வாகனத்தை பார்த்துவிட்டு அதற்கு பின்பு தான் இன்சூரன்ஸ் செய்யப்படும் என்றால் வாகனத்தை பார்த்துவிட்டு தான் இன்சூரன்ஸ் போடுவார்கள். (இதற்கு 2வது எதிர்மனுதாரர் வழக்கறிஞர் ஆட்சேபனை தெரவித்ததால், ஆட்சேபனையுடன் பதிவு செய்யப்படுகிறது).

29 நாட்கள் காலதாமதத்துடன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்பதற்கான விபத்து பதிவேடு மற்றும் டிஸ்சார்ஜ் சம்மரி ஆகியவை நீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் காப்பீடு நிறுவனத்தின் இன்சூரன்ஸ் கொடுக்க கூடாது என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, விபத்து நடந்ததற்கு சாத்தியமே இல்லை, அதனால் எங்கள் காப்பீட்டு நிறுவனம்

நஷ்டஈடு கொடுக்க வேண்டிய அவசியமில்லை. விபத்து வாகனமானது ஏற்கனவே வேறொரு காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தால் எங்கள் நிறுவனம் விபத்து வாகனத்தை பார்க்காமலேயே இன்சூரன்ஸ் போட்டிருப்பார்கள் என்றாலும், விபத்து வாகனமானது வேறு எந்த ஒரு காப்பீட்டு நிறுவனத்திலும் காப்பீடு செய்யப்படாமல் இருந்ததால் தான் விபத்து வாகனத்தை பார்த்துவிட்டு பின்பு எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்தோம் என்றாலும், அதனால் எங்கள் காப்பீட்டு நிறுவனம் தான் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டது என்றாலும் சாத்தியமில்லை.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.